**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 27.07.2026**
**OS. No. 117/2023**
**வழக்கு சாட்சி PW.1–வேணுகோபால், த/பெ. சிவலிங்கம்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1) சொத்து உயில் மூலம் எனக்கு பாத்தியப்பட்டது என்று தீர்ப்பு கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் நெசவு தொழில் செய்து வருகிறேன். என் தாத்தா பெயர் கோவிந்தசெட்டி ஆகும். கோவிந்தசெட்டிக்கு மொத்தம் எத்தனை பிள்ளைகள் என்றால் ஒரு மகன் மட்டும் தான் அவர் பெயர் சிவலிங்கம் ஆகும். சிவலிங்கத்திற்கு இரண்டு பெண் பிள்ளைகளும், மூன்று ஆண் பிள்ளைகளும் ஆகும். அவர்கள் பெயர்கள் வெங்கடலட்சுமி, ராமதாஸ், ரவிசந்திரன், வேணுகோபால் (வாதி), உமா ஆகும்.

2) தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் என் தாத்தா கோவிந்தசெட்டிக்கு பாத்தியப்பட்டது. அந்த சொத்திற்கு கோவிந்தசெட்டி பெயரில் தனிப்பட்டா இருந்ததா என்றால் இருந்தது. அந்த பட்டாவை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எத்தனையாவது ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியாக நினைவில்லை. என்னிடம் காட்டப்படும் என் நிரூபண வாக்குமூலத்தில் அந்த ஆவணம் குறியீடு செய்யப்பட்டதாக இல்லை என்றால் வா.சா.ஆ.7 ஆக தாக்கல் செய்துள்ளேன், என் தாத்தா பெயரில் கூட்டாக பட்டா வழங்கப்பட்டதா என்று தற்போது நினைவில்லை.

3) என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் வா.சா.ஆ.7 என்றால் சரிதான். அதில் 132 நபர்களின் பெயர் பட்டாவில் உள்ளது என்றால் சரிதான், அது என் தாத்தா பெயரிலிருந்து என் தந்தை பெயருக்கு பிரிந்து வரப்பட்ட பட்டா ஆகும். என் நிரூபண வாக்குமூலத்தில் நான் சாட்சியம் சொல்வது போல் இல்லாமல், மூன்றாம் நபர் சாட்சியம்

சொல்வது போல் உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ–1 உயில் ஆவணமானது யாரால், எங்கு தயார் செய்யப்பட்டது என்றால் என் தாயார் சொல்ல சொல்ல குமார் என்பவர் தயார் செய்தார். என் தாயார் இறக்கும்போது அவருக்கு சுமார் 72 வயது இருக்கும். மேற்படி உயிலில் யார் யார் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் மோகன், நடராஜ் என்பவர்கள் சாட்சி கையெழுத்து செய்துள்ளார்கள். மோகன் மற்றும் நடராஜ் அவர்களின் தந்தை பெயர் என்ன என்றால் எனக்கு நினைவில்லை. மோகன் என்பவர் ஓமலூரையும், நடராஜ் என்பவர் அமரம் கிராமத்தையும் சேர்ந்தவர்கள் ஆவார்கள்.

4) மேற்படி உயிலானது என் தாயார் இறந்தபின் நான் வீடுகளை சுத்தம் செய்யும் போது என் தாயாரின் அறையில் இருந்து எனக்கு கிடைத்தது. என் தாயாருக்கு சுமார் 20 வருடங்களாக உடல்நிலை சரியில்லாமல் படுத்த படுக்கையாக இருந்தார் என்றால் சரியல்ல, அவ்வப்போது உடல் நிலை சரியில்லாமல் இருக்கும். என் தாயாருக்கு கை, கால்கள் சரிவர இயங்காமல் சுமார் 15 வருட காலம் இருந்தார் என்றால் சரியல்ல, இறப்பதற்கு 2 ஆண்டுகளுக்கு முன்பு தான் அவ்வாறு இருந்தார். நான் சொல்வது தவறு என்றும், அவருக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்து 1996 முதல் 2004 வரை 4ம் பிரதிவாதி உமா அவர்களின் வீட்டில் சேலத்தில் வசித்து வந்தார் என்றால் சரியல்ல.

5) சிவலிங்கம் வீட்டில் 2009 முதல் 2012 வரை என் தாயார் இருந்தார் என்றால் சரியல்ல. பொதுவாக தாயார் இறந்தால் மூத்த மகன் தான் சடங்குகள் செய்வார் என்றால் எனக்கு சரியாக தெரியாது. என் தாயார் இறந்தபோதுமூத்த மகனான என் அண்ணன்2ம் பிரதிவாதி ராமதாஸ் தான் இறுதிசடங்குகளை செய்ய முன் வந்தார் என்றும், ஆனால் நாங்கள் அவரை அடித்து துரத்திவிட்டோம் என்றால் சரியல்ல. இறக்கும் வரையில் என் தாயாரை நான் தான் உடனிருந்து பார்த்துகொண்டேன் என்று சொல்கிறேனா என்றால் ஆமாம், எனது வேலைகளையும் செய்து கொண்டு அவரை பார்த்துகொண்டேன். நான் என் வீட்டிலேயே நெசவு தொழில் செய்து வருகிறேன். அவ்வாறெனில் என் வீட்டிற்கு யார் வருவது, யார் செல்வது என்று எனக்கு தெரியும் என்றால் நான் வெளியில் செல்லும் நேரம் போக மற்ற நேரங்களில் தெரியும்.

6) 21.03.2012 ல் என் தாயார் எனக்கு ஒரு சொத்து பொறுத்து செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் சரிதான். அந்த செட்டில்மெண்ட் படி நான் என் தாயாரை பராமரிக்காததால் 30.04.2012 ல் மேற்கண்ட செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்து விட்டார் என்றால் சரியல்ல, என் தாயாரை வற்புறுத்தி பிரதிவாதிகள் வெங்கடலட்சுமி, ராமதாஸ், ரவிசந்திரன், உமா ஆகியோர்கள் சேர்ந்து ரத்து செய்ய வைத்து சொத்தை விற்றுவிட்டார்கள். அவ்வாறு வற்புறுத்தி சொத்தை விற்க செய்துவிட்டனர் என்று என் தாயார் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளரா என்றால் கொடுத்துள்ளார். காவல் நிலையத்தில் புகார் கொடுத்தற்கு ஆதரவாக ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், என்னிடம் உள்ளது. அவ்வாறு எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் வீட்டின் வீட்டு வரி மற்றும் மின் இணைப்பு ஆகியவை என் தந்தை சிவலிங்கம் பெயரில் தான் உள்ளது.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு 14.08.2026 ம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/−திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.